பக்கங்கள்: 05

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:34 | 19.12.2023 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

WILD FOREST FOUNDATION
wild-forest.org




# பிரதேச சபைகளின் பொறுப்பற்ற செயலால்

# டெங்கு வலயமாகும் வடமராட்சி





வல்லிபுரம், முள்ளி பகுதிகளில் பருத்தித்துறை பிரதேச, நகர சபைகள் மிக நீண்ட காலமாக உக்காத கழிவுகளை தொடர்ச்சியாக கொட்டி வருகின்றனர். உக்காத கழிவுகள் மீள்சுழற்சிக்குரிய செயற்திட்டம் இதுவரை பிரதேச சபைகளினால் ஆரம்பிக்கப்படவில்லை.

தனியார் செயற்படுத்துவதற்கும் உரிய ஒழுங்கு முறைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் இல்லை.

டெங்கு நுளம்புகளின் பெருக்கம் தற்போது மிகத் தீவிரமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. மாவட்டச்செயலகம் வட மாகாண சுகாதார திணைக்களம் ஆளுநர் அலுவலகம் இணைந்து டெங்கு நுளம்பு பரவலைத் தடுப்பதற்கான கலந்தமர்வுகளை நடாத்தி வருகின்றனர்.

ஆனால் பொறுப்பு வாய்ந்த பிரதேச மற்றும் நகர சபைகளே இவற்றுக்கு முழுப்பொறுப்பாளிகளாக இருக்கின்றனர் என்று ஏன் இன்னும் அடையாளம் காணாமல் இருக்கின்றனர் என்பது தெரியவில்லை.

## சீனாவில் நில நடுக்கம் 126 பேர் மரணம்



வடமேற்கு சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் குறைந்தது 126 பேர் இறந்துள்ளனர். 536 பேர் காயமடைந்துள்ளனர். 14 இற்கும் குறைவான வெப்ப நிலையால் மீட்பு முயற்சிகள் தடைபட்டுள்ளன.

கன்சுவில் உள்ள ஜிஷீஷான் கவுண்டியில் உள்ள 15 உறைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 14, 700 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று சீன அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பள்ளிகளில் காயங்கள் அல்லது இறப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்று அறிக்கைகள் கூறுகின்றன. கிங்காய் மாகாணத்துடன் மாகாண எல்லையில் இருந்து ஐந்து கிலோமீற்றர் (மூன்று மைல்) தொலைவில் உள்ள ஜிஷிஷானில் ஒரே இரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அப்பகுதியில் தகவல் தொடர்பு சேவைகள் ஓரளவு... (பக்:02)

## வடக்கில் 29 பாடசாலைகள் மூடப்பட்டன

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கில் உள்ள 29 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் மன்னார் மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மழையினால் அந்தந்த மாகாணங்களில் வசிக்கும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பல அரச பாடசாலை கட்டடங்களில் நலன்புரி முகாம்கள் நடைபெற்று வருவதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கில் தற்போது இயங்கிவரும் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை இராணுவத்தினர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் நில நடுக்கம் 126...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுக்கப்பட்டுள்ளன, மேலும் 80%க்கும் அதிகமான மின்தடைகள் மீட்டமைக்கப்பட்டுள்ளதாக தேசிய எரிசக்தி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

25 மில்லியன் மக்கள் தொகையுடன், தொலைதூர மற்றும் மலைப் பகுதியானது பல பெரும்பான்மையான முஸ்லிம் இனக்குழுக்கள் மற்றும் சில திபெத்திய சமூகங்களுக்கு அருகில் உள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் இப்பகுதியில் மில்லியன் கணக்கான மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்ட போதிலும், இது மிகவும் வறிய மாகாணங்களில் ஒன்றாக உள்ளது.

# இஸ்ரேலில் 10,000 பேருக்கு வேலை முதல் குழு நேற்று சென்றது



இஸ்ரேலில் விவசாயத் துறை வேலை வாய்ப்புப் பெற்ற 30 பேர் கொண்ட முதல் குழு நேற்று கட்டுநாயக்கவில் இருந்து புறப்பட்டது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற வைபவத்தில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் முதல் தொகுதி தொழிலாளர்களுக்கான விமான டிக்கெட்டுகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உடன்படிக்கையின் பிரகாரம், அடுத்த சில வாரங்களில் 10,000 பணியாளர்கள் இஸ்ரேலுக்கு செல்ல முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தப் பணிகளுக்கு எந்தத் தரப்பினருக்கும் பணம் கொடுக்கத் தேவையில்லை என்று அமைச்சர் கூறினார்.

# புதிய மில்கோ தலைவராக ஜனக தர்மகீர்த்தி நியமனம்

மில்கோ கம்பனி லிமிடெட்டின் புதிய தலைவராக விவசாய அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் நியமிக்கப்பட்டுள்ளார். விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பதவிக்கு மேலதிகமாக, அமைச்சர் ஜனக தர்மகீர்த்திக்கு இந்த தலைவர் பதவிக்கான கடமைகளையும் வழங்கியுள்ளார். புதிய தலைவர் டிசம்பர் 18 ஆம் திகதி முதல் பதவியேற்றார்.

நிறுவனத்தின் ஊழியர்களின் அதிருப்தி அதிகரிப்பு மற்றும் மில்கோ நிறுவனத்தின் உற்பத்தித்திறன் குறைவடைந்துள்ளமை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இந்த நியமனம் வழங்கப்படுவதாகவும் புதிய தலைவரை நியமிக்கும் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மில்கோ (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தை இந்திய நிறுவனத்திற்கு விற்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மில்கோவின் முன்னாள் தலைவர் ரேணுகா பெரேரா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

## வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கட்டுப்பாடு அவசியம்

**வாழ்வாதார முன்னேற்றத்துக்காக தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாட்டுக்குச் செல்லும் பெண்கள் அங்கு சித்திரவதை செய்யப்படுவது தொடர்கதையாக உள்ளது. அதனைத் தடுப்பதற்கான வேலைத் திட்டம் எதுவும் இலங்கையில் இல்லை. குழந்தைகள் உள்ள பெண்கள் வெளிநாட்டுக்கு வேலை தேடிச் செல்வதற்கு தடை விதிக்கப்போவதாக வரும் செய்தி ஆறுதலாக உள்ளது.**

**5 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்வதை தடுக்கும் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த பாராளுமன்ற குழு பரிந்துரைத்துள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

**அண்மையில் பாராளுமன்ற வளாகத்தில் கூடிய குழந்தைகள், பெண்கள் மற்றும் பாலின உறவுகளுக்கான துறைசார் மேற்பார்வைக் குழு இந்த பரிந்துரையை அளித்துள்ளது. 5 வயது வரை வளரும் குழந்தையின் தாயின் கவனிப்பு இல்லாமல் ஏற்படும் பாதிப்பு அடுத்த 2025 ஆண்டுகளில் மிகப்பெரிய சமூக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று விவாதிக்கப்பட்டது.**

**அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் படி, 02 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட தாய்மார்கள் வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, இதனால் குழந்தை தாய்ப்பாலைப் பெறும் திறனை இழக்கிறது, தாய் மற்றும் குழந்தைக்கு இடையிலான பிணைப்பும் இழக்கப்படுகிறது என்று குழு வலியுறுத்தியது.**

**மேலும், சிறுவயதிலிருந்தே தாயை இழந்தால், எதிர்காலத்தில் மிகவும் வன்முறையான தலைமுறை உருவாக வாய்ப்புள்ளதாகவும் தாய் வெளிநாடு செல்வதால், சிறுவயதிலிருந்தே குழந்தைகள் பராமரிப்பின்றி தவிப்பதால், அந்தக் குழந்தைகள் எதிர்காலத்தில் போதைப்பொருள் மற்றும் பிற குற்றச் செயல்களில் ஈடுபடும் போக்கு.**

**குழந்தைகள் பிறர் பராமரிப்பில் இருப்பதால் அக்கம்பக்கத்தினர் மட்டுமின்றி, தந்தை, தாத்தா போன்ற நெருங்கிய உறவினர்களாலும் அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள் என்றும் விவாதிக்கப்பட்டது.**

**குழந்தைப் பருவத்தில் குழந்தைகளுக்கான பாதுகாப்பான மற்றும் முறையான பரிந்துரைகளின் அடிப்படையில் செயல்படும் தினப்பராமரிப்பு மையங்களுக்கு வலுவான தேவை உள்ளது என்று வலியுறுத்தப்பட்டது.**

**மேலும் தினப்பராமரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் குறிப்பிட்ட நிறுவனம் இல்லை என்றும் பகல்நேர பராமரிப்பு மையங்கள் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றும், தினப்பராமரிப்பு மையங்கள் தொடர்பான தரவுகள் மிகவும் குறைபாடு உள்ளதாகவும் விவாதிக்கப்பட்டது.**

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கையிலுள்ள சிறுவர் தினப்பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மேற்கண்ட பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும் என குழு கருத்து தெரிவித்தது.**

**தவறான தகவல்களுடன் பெண்களை வேலைக்கு அனுப்பும் முகவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.**

# தொடர் கொலையாளியான பெண்ணுக்கு மரணதண்டனை




*சீனாவைச் சேர்ந்த பெண் சீரியல் கில்லர் லாவோ ராங்சி (வயது 49). 1996 முதல் 1999 வரையிலான 3 ஆண்டுகளில் கொள்ளை, மிரட்டி பணம் பறித்தல் மற்றும் 7 பேர் கொடூர கொலை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டதற்காக பொலிஸார் அவரை தேடி வந்தனர். 20 ஆண்டுகளாக பொலிஸில் சிக்காமல் தலைமறைவாக இருந்து வந்துள்ளார். 2019 ஆம் ஆண்டு பொலிஸார் அவரைக் கைது செய்தனர். இது பற்றிய வழக்கு விசாரணையில், லாவோவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கிழக்கு சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் நான்சங் பகுதியில் உள்ள கோர்ட்டு ஒன்றில் இதற்கு எதிராக மேல்முறையீடு செய்ததில், அவரது தண்டனை உறுதி செய்யப்பட்டது. இதுபற்றி அந்த கோர்ட்டு வெளியிட்ட செய்தியில், சுப்ரீம் கோர்ட்டின் ஒப்புதல் பெறப்பட்டதும் திங்கட்கிழமை காலையில் லாவோவுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என தெரிவித்து உள்ளது.*

# தீவிபத்தில் 13 பேர் பலி 178 பேர் காயம்




*மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு கினியா தலைநகர்கொனக்ரியிலுள்ள ஹலம் பகுதியில் எரிபொருள் சேமிப்பு கிடங்கில் நேற்று அதிகாலை பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. இந்தக்கோர தீ விபத்தில் வெளிநாட்டினர் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 178 பேர் படுகாயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு, மீட்புக் குழுவினர் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். மேலும், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.*

# தாவூத் இப்ராஹிம் நலமாக உள்ளார் - சோட்டா ஷகீல்

*நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிம், கடுமையான உடல்நலக் கோளாறு காரணமாக பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நேற்று தகவல்கள் வெளியாகின.*

*தாவூத் இப்ராஹிமை, விஷம் வைத்து கொல்லப்பட சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவும் அதனாலேயே அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனவும் சமூக வலைத்தளங்களில் பல தக*



*வல்கள் வெளியாகின.*

*மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இப்ராஹிம், பலத்த பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளார் என்றும், அந்த மருத்துவமனையில் அந்தத் தளத்திலுள்ள ஒரே நோயாளி அவர் மட்டும் தான் எனவும் செய்திகள் தெரிவித்தன. இந்த நிலையில், தாவூதின் நெருங்கிய கூட்டாளியான சோட்டா ஷகீல், இது வெறும் வதந்தி. பாய் பூரண நலத்துடன் இருக்கிறார் என கூறியதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா தெரிவித்துள்ளது.*

# அமைச்சர் பொன்முடி விடுதலையை ரத்து செய்த உயர்நீதிமன்றம்

*கடந்த 2006-2011 ஆம் ஆண்டுவரை தி.மு.க ஆட்சியில் இருந்த காலகட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்தவர் அமைச்சர் பொன்முடி கடந்த 2011 ஆம் ஆண்டு தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் இவர் மீதும் இவரது மனைவி மீதும் வருமானத்திற்கு அதிகமாக ரூ.1.75 கோடி அளவில் சொத்து சேர்த்ததாக கூறி வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில் இந்த வழக்கின் விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் தொடர்ந்து நடந்த நிலையில் கடந்த 2016 ஆம் ஆண்டு அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத காரணத்தினால் அவரை நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது. இதனையடுத்து கடந்த 2017 ஆம் ஆண்டு லஞ்சஒழிப்புத்துறை அதிகாரிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கினை மேல் முறையீடு செய்தனர்.*

*மேல்முறையீடு வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றம் நீதிபதி ஜெயச்சந்திரன் முன்பு நடந்து வந்தது. அப்போது லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் 39 சாட்சியங்களிடம் மேற்கொண்ட புலன் விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் உண்மைத்தன்மை இல்லை என்று அமைச்சர் பொன்முடி தரப்பில் வாதிடப்பட்டது.*

*அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் இன்று(டிச.19) இவ் வழக்கின் மீதான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பின் படி, 64.90% வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளனர் என்பது நிரூபணமாகியுள்ளது. அதனால் அமைச்சர் பொன்முடியின் விடுதலை செல்லாது என்று கூறி நீதிபதி அவரது விடுதலையை ரத்து செய்துள்ளார். மேலும் வரும் 21 ஆம் திகதி இவ் வழக்கின் தண்டனை குறித்த விபரங்கள் காலை 10.30 மணியளவில் தெரிவிக்கப்படும் என்று நீதிபதி, கூறினார்.*

# கீரி சம்பாவிற்கு பதிலாக புதிய வகை அரிசி



கீரி சம்பா அரிசிக்கு பதிலாக 50,000 மெற்றிக் தொன் ஜிஆர் 11 அரிசியை இறக்குமதி செய்வதற்கு தனியாருக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த உணவுக் கொள்கைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சந்தையில் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசியின் விலையில் போட்டித் தன்மையை ஏற்படுத்தி, நுகர்வோருக்கு விலை அனுகூலத்தை வழங்கும் நோக்கில் இந்த அரிசியின் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி நிலையங்களுக்கு அனுமதி

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் யாழ்ப்பாணம், ஹோமாகம மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்களை நிறுவ அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெளிநாட்டு வேலையை எதிர்பார்த்து உள்ளவர்களுக்கான துரிதப்படுத்தப்பட்ட மற்றும் செல்லவுள்ள நாட்டை இலக்காக கொண்ட விசேட பயிற்சி திட்டங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் நடத்தப்படுகிறது. தற்போது நாடளாவிய ரீதியில் வாடகைக்கு பெறப்பட்ட கட்டடங்களில் குறைந்தபட்ச வசதிகளின் கீழ் இந்தப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

# சோளம் இறக்குமதிக்கு அனுமதி



சந்தையில் போதியளவு சோளம் கையிருப்பு இல்லாத காரணத்தினால் 15,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கோழி தீவன உற்பத்திக்கான மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக தற்காலிக நடவடிக்கையாக இந்த சோளம் இறக்குமதி செய்யப்பட உள்ளது.

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து இந்த சோளத்தை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சோலார் பேனல்களின் விலை அதிகரிப்பு



அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சோலார் பேனல்களின் விலை குறைந்தபட்சம் இரண்டு இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கப்படும் என இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் செயலாளரும் அதன் சக்தி சபையின் தலைவருமான கலாநிதி லக்மால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். சோலார் பேனல்களுக்கு 18% வட் விதிக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

# அடையாள அட்டைக்கான புகைப்படக் கட்டணம் அதிகரிப்பு

அடையாள அட்டை அல்லது நகல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் நபரின் டிஜிட்டல் நகல் எடுப்பதற்கு பதிவு செய்த புகைப்படக் கலைஞரால் வசூலிக்கப்படும் அதிகபட்ச கட்டணம் ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்த விலை இரத்துச் செய்யப்படுவதாக பொது பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக 150 ரூபாய் வசூலிக்கப்பட்டது.

# திருகோணமலை கோயில் மதில் வீழ்ந்தது

நாடளாவிய ரீதியில் பெய்துவரும் கடும் மழையால் திருகோணமலையில் உள்ள இலிங்கநகர் பாலமுருகன் ஆலய பின்புற மதில் நேற்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதேவேளை, பால முருகன் ஆலயத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நாடு திரும்பினார் மலையக குயில் அசானி



தென்னிந்திய தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சரிகமப நிகழ்ச்சியில் பங்கேற்ற புசல்லாவை, நயாபன பகுதியை சேர்ந்த அசானி நேற்று நாடு திரும்பினார். குழந்தைகளின் இசை திறமையை உலகளவில் அறிய வைக்கும் நிகழ்ச்சியாக சரிகமப மக்கள் மத்தியில் மிகப்பெரிய இடத்தை பெற்றுள்ளது.

அது மட்டுமல்லாது சரிகமப போட்டியில் பங்குபற்றியதன் ஊடாக மலையக மக்கள் படும் இன்னல்களை உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளார் அசானி. இந்நிலையில் நாடு திரும்பிய அசானிக்கு பலரும் வாழ்த்துக்களை கூறிவருகின்றனர்.

# மின்சாரமும் எரிபொருளும் அத்தியாவசிய சேவைகளாகின

மின்சார விநியோகம், பெற்றோலியப் பொருட்கள் விநியோகம் மற்றும் எரிபொருளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் (2363/02) ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, மின்சார விநியோகம், பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம் அல்லது விநியோகம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுகின்றன.

# சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்திற்கு சீல்

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்திற்கு சீல் வைக்குமாறு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சர்ச்சைக்குரிய ஹியுமன் இம்யூனோகுளோபிலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் சந்தேகநபர்கள் நேற்று (2023.12.18) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர் சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்தை இன்று (2023.12.19) முற்பகல் சோதனைக்குட்படுத்துமாறும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவிற்கமைய சமன் ரத்நாயக்கவின் அலுவலகத்திலுள்ள ஆவணங்கள் இன்று பரிசோதிக்கப்படவுள்ளன.

இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் நேற்று கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஐ.பி.எல் வரலாற்றில் மிட்செல் ஸ்டார்க்கு அதிக விலை

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலம் இன்று துபாயில் நடைபெற்றது. அதில் அனைத்து 10 அணிகளிலும் உள்ள வெறும் 77 இடங்களுக்கு இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 33 வீரர்கள் போட்டி போட்டதால் அதிக தொகைக்கு விலை போகப் போவது யார் என்று எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் ஏற்பட்டது.

அவுஸ்திரேலியாவின் நட்சத்திர பௌலரான மிட்செல் ஸ்டார்க்கை கடும் போட்டிக்குப் பிறகு ரூ.24.75 கோடிக்கு வாங்கியுள்ளது. 2023 சீசனில் இங்கிலாந்து வீரர் சாம் கரண் 18.5 கோடிக்கு பஞ்சாப் அணிக்காக வாங்கப்பட்டதே முந்தைய சாதனையாகும்.











கொல்கத்தா நைட் ரைடர்ஸ். ஸ்டார்க்கை ஏலம் எடுக்க குஜராத் மற்றும் கொல்கத்தா அணிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவியது. 2023 டெஸ்ட் சாம்பியன்ஷிப் பைனல், உலகக் கோப்பை பைனலில் இந்தியாவை அடித்து நொறுக்கி வெற்றியை பறித்த அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட்டை வாங்குவதற்கு சென்னை, ஹைதராபாத் அணிகள் இடையே கடுமையான போட்டி நிலவியது. ஆனால் கடைசியில் ஹைதராபாத் நிர்வாகம் விட்டுக் கொடுக்காமல் 6.80 கோடிக்கு போட்டி போட்டு அவரை வாங்கியது. ரோவ்மன் போவல் ராஜஸ்தான் அணிக்காக வாங்கப்பட்ட நிலையில் நியூஸ்லாந்தை சேர்ந்த இளம் வீரர் ரச்சின் ரவீந்தராவை சென்னை சூப்பர் கிங்ஸ் 1.8 கோடி என்ற குறைந்த தொகைக்கு வாங்கி அசத்தியது. குறிப்பாக 2023 உலகக் கோப்பையில் 523 ஓட்டங்கள் குவித்த அவர் அறிமுக தொடரிலேயே அதிக ஓட்டங்கள் அடித்த வீரராக மாபெரும் உலக சாதனை படைத்தார்.

உலகக் கோப்பையில் சிறப்பாக ஆடிய நியூஸ்லாந்து வீரரான டேரில் மிட்செலை 14 கோடி ரூபாய்க்கு சென்னை அணி வாங்கியிருக்கிறது.ஹர்ஷல் படேலை 11.75 கோடி ரூபாய்க்கு பஞ்சாப் அணி வாங்கியிருக்கிறது. ஹர்ஷல் படேலை வாங்க குஜராத், பஞ்சாப், லக்னோ அணிகளிடையே கடும் போட்டி நிலவியது. முன்பு சென்னை அணிக்கு ஆடிய ஷர்துல் தாகூரை ஏலத்தில் 4 கோடிக்கு மீண்டும் வாங்கியிருக்கிறது சென்னை அணி. இலங்கை அணியின் ஸ்பின்னரான வனிந்து ஹசரங்காவை அடிப்படை விலையான 1.50 கோடிக்கே வாங்கியது சன்ரைசர்ஸ். டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி ஹாரி ப்ரூக்கை 4 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறது. கரீபிய வீரரான ரோவ்மன் பவலை 7.4 கோடிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணி வாங்கியிருக்கிறது. உமேஷ் யாதவை குஜராத் டைட்டன்ஸ் அணி 5.80 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் வாங்கியிருக்கிறது. அல்சாரி ஜோசப்பை 11.50 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது பெங்களூர் அணி.




கருண்நாயரையும் ஸ்மித்தையும் எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை

50 லட்சத்தை அடிப்படை விலையாக கொண்டிருந்த மனீஷ் பாண்டேவும் விற்கப்படவில்லை.

நியூஸ்லாந்து வீரர் டார்ல் மிட்சேலை 14 கோடி என்ற மிகப்பெரிய தொகைக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் போட்டி போட்டு வாங்கியது ரசிகர்களுக்கு ஆச்சரியமாக அமைந்தது. ஏனெனில் கடந்த வருடம் எந்த அணியும் வாங்காதால் விலை போகாத அவரை இம்முறை சென்னை இவ்வளவு பெரிய தொகைக்கு வாங்கியுள்ளது. இருப்பினும் இதன் பின்னணியில் டோனி இருப்பார் என்று ரசிகர்கள் நம்புகின்றனர். ஏனெனில், வேகப்பந்து வீச்சு ஆல் ரவுண்டரான அவர் 2023 உலகக் கோப்பையில் தரம்சாலா நகரில் பேட்டிங்க்கு சாவலான மைதானத்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சதமடித்து நியூஸ்லாந்தின் வெற்றிக்கு போராடினார். அதைவிட மும்பையில் நடைபெற்ற முதல் செமி பைனலில் மீண்டும் இந்தியாவுக்கு எதிராக 7 விக்கெட்களை எடுத்து மிரட்டிய ஷமி போன்ற அனைத்து பவுலர்களையும் மிகச் சிறப்பாக எதிர்கொண்ட அவர் சதமடித்து 134 (119) ஓட்டங்கள் விளாசி வெற்றிக்கு போராடினார்.

அந்த வகையில் 2023 உலகக் கோப்பையில் சிறந்த பவுலிங்கை கொண்ட இந்திய அணிக்கு எதிரான 2 போட்டிகளிலும் மிட்சேல் 2 சதங்கள் அடித்து இந்திய சூழ்நிலைகளில் தம்மால் அசத்த முடியும் என்பதைக் காண்பித்தார். இது மட்டுமல்லாமல் கடந்த வருடத்துடன் அம்பத்தி ராயுடு ஓய்வு பெற்ற நிலையில் பென் ஸ்டோக்ஸையும் சென்னை விடுவித்தது. எனவே மிடில் ஆர்டரில் நங்கூரமாகவும் அதிரடியாகவும் விளையாடக்கூடிய திறமையும் தேவைப்படும் நேரங்களில் மித வேகப்பந்து வீச்சாளராக செயல்படும் தன்மையையும் கொண்டுள்ள காரணத்தாலேயே அவரை சென்னை இவ்வளவு பெரிய தொகை கொடுத்து வாங்கியுள்ளது என்றே சொல்லலாம். ஷிவம் மவியை ரூ.6.8 கோடிக்கு லக்னோ சூப்பர் ஜெயின்ட்ஸ் அணி வாங்கியுள்ளது. இந்திய பௌலரான இவர் இதற்கு முன்னர் கொல்கத்தா அணிக்காக விளையாடியுள்ளார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 19.12.2023 அன்று வெளியிடப்பட்டது.